sns academy
a fingerprint school

sns INSTITUTIONS
www.snsgroups.com

இயல் – 3 புலி தங்கிய குகை

I. சரியான சொல்லால் நிரப்புக:

1.யாண்டு என்னும் சொல்லின் பொருள் _____

அ. எனது ஆ. எங்கு இ. எவ்வளவு ஈ. எது

2. யாண்டுளனோ? – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _____

அ. யாண்டு + உளனோ? ஆ. யாண் + உளனோ?

இ. யா + உளனோ? ஈ. யாண்டு + உனோ?

3. கல் + அளை – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____

அ. கல்லளை ஆ. கல் அளை இ. கலலளை ஈ. கல்லுளை

4. சிற்றில் என்பதன் பொருள்_____

அ. சிறு ஊர் ஆ. சிறு வீடு இ. சிறு கூடு ஈ. சிறு ஆடை

5 . காவற் பெண்டு என்பவர்_____

அ. காவலர் ஆ. அமைச்சர் இ. ஆசிரியர் ஈ. புலவர்

6. போரவைக் கோப்பெரு நற்கிள்ளி என்பவர்_____

அ. பாண்டிய மன்னன் ஆ. சேர மன்னன் இ. சோழ மன்னன் ஈ. குறுநில மன்னன்

7. போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாய் _____

அ. காரைக்கால் அம்மையார் ஆ. வெண்ணிக்குயத்தியார் இ. ஔவையார்

ஈ. காவற் பெண்டு

8. எட்டுத் தொகை நூல்களில் ஒன்று_____

அ. திருக்குறள் ஆ. கம்பராமாயணம்

இ. புறநானூறு ஈ. பிள்ளைத்தமிழ்

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே*
–காவற்பெண்டு

9. பாடலில் காணப்படும் சீர் எதுகை_____

அ. சிற்றில் – நற்றூண் ஆ. சிற்றில் – நின்மகன்

இ. யாண்டு – உளனோ ஈ. ஈன்ற – இதுவே

10. பாடலில் காணப்படும் மோனை நயம்_____

அ. யாண்டு – என்மகன் ஆ. யாண்டு – புலிசேர்ந்து இ. யாண்டு – யாண்டு உளன்

ஈ. புலிசேர்ந்து – ஈன்ற